# கலைஞராகவே மாறி வருகிறார்!



இனிய நண்பர்களே,
மார்ச் 1 ஆம் தேதி கழகத்தின் தலைவர்
தமிழகத்தின் முதல்வர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
71ல் அடிஎடுத்து வைக்கிறார்!
அரசியல்வாதியின் மகனாகப் பிறந்து
அரசியல்வாதியாகவே வாழ்ந்து கொண்டிருப்பவர்
தலைவர் ஸ்டாலின் அவர்கள்!

**இளைஞர் அணிச் செயலாளராக;**
**மேயராக;**
**சட்டமன்ற உறுப்பினராக;**
**மாண்புமிகு அமைச்சராக;**
**துணை முதல்வராக;**
**கழகத்தின் செயல்தலைவராக;**
**கழகத்தின் தலைவராக;**
**முதலமைச்சராக;**
**இப்படி நினைவுதெரிந்த காலம் முதல்**
**இன்று வரை இயக்கத்தைப் பற்றியே**
**சிந்தித்துக் கொண்டிருப்பவர்!**

வாழ்ந்த 70 ஆண்டுகளில்
சுமார் 50 ஆண்டு காலம் அரசியல் பணியிலேயே
தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்!
வசந்தகாலத்தில் அவர் வாழ்ந்ததைவிட
புயலின் வேகத்திற்கு ஈடுகொடுத்து வாழ்ந்ததுதான் அதிகம்!
இந்த 50 ஆண்டுகளில்
அவர் பேசாத ஊர் இல்லை;
அவர் கால்படாத இடமில்லை;
என்ற அளவிற்கு அவரின் அரசியல்பணி இருந்து வருகிறது!

**உலக அரசியல் வரலாற்றில்**
**இளைஞர்களின் பலத்தை அறிந்து அவர்களைத் திரட்டி**
**இயக்கப் பணிக்கு ஆட்படுத்தியவர்கள் இரண்டு பேர்!**
**ஒருவர் இத்தாலி நாட்டின் விடுதலைக்கு வித்திட்ட "கரிபால்டி"!**
**இன்னொருவர் "ஃபெடல் கேஸ்ட்ரோ"!**
**இந்த வரிசையில்**
**இயக்கப் பணிக்காக இளைஞர் படையைத்**
**திரட்டியவர் நம் தளபதி அவர்கள்!**
**திரட்டிய இளைஞர் படை**
**நாட்டு விடுதலைக்காக அல்ல,**
**தமிழ்நாட்டின் நலனுக்காக!**


அமைச்சர்
துரைமுருகன்
கழகப் பொதுச் செயலாளர்

தளபதியின் உழைப்பு;
சிந்திய ரத்தம்;
கொட்டிய வியர்வை;
அலைந்த அலைச்சல்;
இவைகள்தான் அவரை
முதலமைச்சர் ஸ்தானத்தில் அமர்த்தியது!

ஆட்சி அதிகாரத்தையும்,
இயக்கத்தின் அமைப்பு முறையையும்
ஒருசேர கையில் வைத்து
இரண்டையும் இம்மியளவும் பிசகாமல்
கொண்டு செல்வதற்கு
அதிதீவிர அரசியல் ஞானமும்
ஆழ்ந்த இயக்கப் பிடிப்பும் இருக்கவேண்டும்.

**இந்த இரண்டையும் அச்சுபிசகாமல் அவர் அப்பாவிடமிருந்து**
**கருவிலிருந்தே கற்று வந்திருப்பார் என்று கருதுகிறேன்!**

புதுப்புதுச் சட்டங்கள் போட;
புதிய தொழில்கள் ஆரம்பிக்க;
வளர்ந்துவரும் விஞ்ஞானமுறையை அமல்படுத்த;
அரசியல் அறிவுபோதும்.
வறுமையில் வாடி, குடிசையில் இருக்கும்
ஏழைகளின் நிலையை நினைத்துப் பார்க்க;
வாழ்வில் உயர்ந்த நிலை - தாழ்ந்த நிலை
இரண்டிலும் இல்லாமல்
இடையில் மாட்டிக் கொண்டு
வெந்து சாகிறவர்களைப் பற்றி கவலைப்பட;
கருணை உள்ளம் வேண்டும்!

**இந்த இரண்டு குணங்களும் ஒருசேர ஒருவரிடம் இருப்பதற்கு**
**பிறவியிலேயே அந்தக் குணங்கள் அவர் நெஞ்சில்**
**ஊறியிருக்க வேண்டும்!**

**தலைவர் கலைஞரிடம் கண்ட அந்த அதிசய நிலையை**
**அப்படியே தளபதியிடம் காணுகிறேன்!**

இளமையில் அவரிடம் இருந்த சினம்
சொல்லாமலேயே விடை பெற்றிருக்கிறது!
பொறுமை அவரைக் கேட்காமலேயே
அவர் உள்ளத்தில் குடி புகுந்திருக்கிறது!
யார் எதைச் சொன்னாலும்
அதைப் பொறுமையாகக் கேட்பது;
நாலு பேர் சொன்னபிறகு
தான் ஒருமுடிவு எடுப்பது;
எவ்வளவுதான் எரிச்சல் ஊட்டினாலும்,
ஏளனமாகப் பேசினாலும்,
கதை பல கட்டினாலும்,
வழக்குகள் படையெடுத்து வந்தாலும்,
நேரத்தை வீணாக்காமல்
நறுக்கென்று பதில் சொல்வது;
இந்தக் குணங்களையெல்லாம்
நான் பலமுறை ரசித்திருக்கிறேன்!

**வரவர தளபதி கலைஞராகவே மாறி வருகிறார்**
**என்ற மகிழ்ச்சியோடு,**
**அவர் பிறந்தநாளில்**
**அவர் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று**
**வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்!**